Tamilnadu Science and Technology Centre
(Department of Higher Education, Government of Tamilnadu)
Gandhi Mandapam Road, Chennai - 600 025.

Office : 044 - 24410025
Direct : 044 - 24918787
Website: www.tnstc.gov.in
E-mail : tnstc.science@gmail.com

Dr. S. Soundararajaperumal, M.Sc.,Ph.D.,
Executive Director, I/C.,

கடித எண். 3335/P1/2022 நாள்.23.11.2022

பெறுநர்:

முதன்மைக் கல்விஅலுவலர்

மாவட்டம்

அன்புடையீர்!

வணக்கம்.

2021 – 22 ஆம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதிற்குத் தங்கள் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி மாணவர்களின் பட்டியல் மின்னஞ்சல் மூலமாக ஏற்கனவே தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (அந்தப்பட்டியல் தற்போது இணைக்கப்பட்டுள்ளது) அம்மாணவர்களுக்குரிய தொகை ரூ10,000/- அவரவர்கள் அளித்த வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

புத்தாக்க அறிவியல் மானக் விருது(INSPIRE MANAK AWARD) 2021-22 ஆண்டுக்கான மாவட்டஅளவிலான கண்காட்சிகள் (District Level Exhibition and Project Competition-DLEPC) நடத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது குறித்து மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பத்துறை மற்றும் தேசிய அறிவியல் புத்தாக்க நிறுவனம் ஆகியவை அனுப்பிய சுற்றறிக்கையின்படி மாவட்ட அளவிலான கண்காட்சிகள் **இணையவழியில்** நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான கண்காட்சிகளை இணையவழியில் நடத்த ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறை மற்றும் தேசியஅறிவியல் புத்தாக்க நிறுவனம் ஆகியன இணைந்து வழிமுறைகளை அறிவித்துள்ளன. தனிப்பட்டகணினி அல்லது கைபேசி மென்பொருள் இப்பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ளது. MANAK Competition APP என்ற இதனை Google Play Store மூலம் பதிவிறக்கிக் கொள்ளலாம்.

புத்தாக்கஅறிவியல் ஆய்வு விருதுக்குத் (2021-2022) தேர்ந்தெடுக்கப்பட்ட 1596 மாணவர்கள் மட்டுமே தங்களது அறிவியல் காட்சிப்பொருள் குறித்த விவரங்களை அனுப்பவேண்டும். அவர்களது விருதுக்கான குறியிட்டுஎண்(Award Code Number – எ-டு: 21TN3104433) ஒவ்வொரு மாணவருக்குமான User ID ஆகும். இந்த எண்ணைப் பதிவிட்டு Get Password என்பதை அழுத்தினால் அவர்கள் **முன்னரே பதிவு செய்துள்ள செல்பேசி எண்ணுக்கு** OTP வாயிலாகக் கடவுச்சொல்(Password)அனுப்பப்படும்.

இதற்கான வழிமுறைகள் (www.youtube.com/watch?v=vIIeWTYBe8o) என்ற காணொளி இணைப்பில் வழங்கப்பட்டுள்ளன. இணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் **தங்களுடைய அறிவியல் செயல்முறைகளை ஒளி,ஒலி காட்சிகள் மூலம் தயாரித்து செல்பேசி அல்லது இணையதளம் மூலமாக அனுப்பவேண்டும். சுருக்கமாக, ஆயிரம் வார்த்தைகளுக்கு மிகாத சுருக்கக் குறிப்பையும் இணைக்கவேண்டும்.**

Tamilnadu Science and Technology Centre

CHENNAI - 600 025.



இம்முறையில் தமிழகத்திற்கான பதிவேற்றம் செய்யும் வாய்ப்பு 2022, டிசம்பர் 4 வரை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதன்பின் இணையம் பதிவுகளை ஏற்காது.

பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு இத் தகவலைஅறிவித்து குறிப்பிட்ட தேதிக்குள் அம்மாணவர்கள் தங்களுடைய செயல்முறைகளை பதிவுசெய்து அனுப்பிவைக்க அறிவுறுத்த வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

23.11.22

செயல் இயக்குநர்(பொ)

இணைப்பு :

1. மாவட்டஅளவில் தேர்ந்தெடுக்கப்பட்டமாணவர்கள் பட்டியல்

நகல்: ஆணையாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-6